**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 233/2023**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் நாள் சனிக் கிழமை PW2-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 21.09.2024 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | வினோத்குமார் (PW-2) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

<u>சாட்சி நீதிமன்றம் மூலம் அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் கிராம அலுவலராக எடக்குடிவடபாடி (II) கிராமத்தில் பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பட்டா எண். 204, சர்வே எண். 464/16 உட்பிரிவு பழனிச்சாமி பெயரில் பதிவாகி உள்ளது. அது சாட்சி சான்றாவணம் 1 ஆகும். புல எண், 464/16B முத்துகுமாரசாமி மகன் கந்தசாமி பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அது சாட்சி சான்றாவணம் 2 ஆகும். 464/16 C, ரமேஷ் பெயரில் அடங்கல் உள்ளது. அது சாட்சி சான்றாவணம் 3 ஆகும். 464/16D முத்துகுமாரசாமி மகன் ஜெயசங்கர் பெயரில் பட்டா மற்றும் துாய அடங்கல் பதிவாகி உள்ளது. அது சாட்சி சான்றாவணம் 4 மற்றும் 5 ஆகும். 416/E முத்துக்குமாரசாமி மகன் கண்ணன் பெயரில் துாயச்சிட்ட பதிவு உள்ளது. அது சாட்சி சான்றாவணம் 6 ஆகும். 464/16F முத்துக்குமார சாமி மகன் கண்ணன் பெயரில் துாயச்சிட்ட பதிவு உள்ளது. அது சாட்சி சான்றாவணம் 7 ஆகும். 464/16G முத்துக்குமார சாமி மகன் சக்திவேல் பெயரில் துாயச்சிட்ட பதிவு உள்ளது. அது சாட்சி சான்றாவணம் 8 ஆகும்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**